# ஜெயங்கொண்டம் நகராட்சி

| Date of Meeting of the Council | MCR | NO SERIAL NUMBER AND SUBJECT IN THE AGENDA | DECISION OF COUNCIL |
|---|---|---|---|
| 28.02.2020 | | ஜெயங்கொண்டம் நகராட்சியில் 2020ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28.02.2020 ம் வெள்ளிக் கிழமை காலை 11 . 0 0 மணியளவில் சாதாரணக் கூட்டம்.<br>**தனி அலுவலர்,**<br>**ஜெயங்கொண்டம் நகராட்சி** | |
| 28.02.2020 | 177 | **<u>பொருள் எண்.1</u>**<br>ஜெயங்கொண்டம் நகராட்சி ஆணையர் அவர்களின் 01/2020 மற்றும் 02/2020 ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மன்றம் பார்வையிட்டு, பதிவு செய்யலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 28.02.2020 | 178 | **<u>பொருள் எண்.2</u>**<br>ஜெயங்கொண்டம் நகராட்சி விருத்தாசலம் சாலையில் உள்ள வாரச்சந்தையின் சுற்றுசுவர் சாலை மட்டத்திலிருந்து சற்றே உயரமாக இருப்பதால் வெளியாட்கள் உள்ளே சென்று சேதப்படுத்தி வருகின்றனர். அதனை தடுத்திடும் வகையில் சுற்றுசுவரினை உயர்த்தி கட்டுவதற்கும், புதிய நகராட்சி அலுவலக கட்டிடத்தின் கீழ்பகுதி மற்றும் வடபகுதியில் சுற்றுசுவர் சேதமடைந்துள்ளதால் புதியதாக சுற்றுசுவர் கட்டுவதற்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>பணிகளின் அவசியம் கருதி மன்றம் அனுமதி அளிக்கலாம். மேற்கண்ட செலவினத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**<u>ந.க.எண். 1071 / 2019 / இ1</u>** | அனுமதிக்கப்பட்டது |
| 28.02.2020 | 179 | **<u>பொருள் எண்.3</u>**<br>ஜெயங்கொண்டம் நகராட்சி வார்டு எண்.17 சத்யா நகரின் முகப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகாலில் சிறுபாலம் சேதமடைந்து மழைக்காலங்களில் வடமான்குட்டையில் நீர் நிரம்பி வெளியேறும் மழைநீர் செல்ல வழிவகை இல்லாமல் தேங்கி நிற்பதோடு, அப்பகுதியில் உள்ள மக்களுக்கு போக்குவரத்திற்கு இடையூராக உள்ளது. எனவே, அப்பகுதிமக்கள் சிறுபாலம் அமைத்துதர கேட்டுக்கொண்டதன்படி, தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>பொதுமக்களின் நலன் கருதி மன்றம் அனுமதி அளிக்கலாம். மேற்கண்ட செலவினத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**<u>ந.க.எண். 1071 / 2019 / இ1</u>** | அனுமதிக்கப்பட்டது |

# ஜெயங்கொண்டம் நகராட்சி

| | | | |
|---|---|---|---|
| 28.02.2020 | 180 | **பொருள் எண்.4**<br>ஜெயங்கொண்டம் நகராட்சி பொதுப்பிரிவு நகராட்சியில் 2019-2020ம் நிதியாண்டு முடியும் தருவாயில் இருப்பதனால் நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய சொத்து வரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், வரியில்லா இனங்கள் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான கடைகள் போன்றவற்றின் வரிகளை மக்கள் சிரமமின்றி எளிதாக செலுத்த ஏதுவாக **1** எண்ணிக்கை கொண்ட கணினி, **1** எண்ணிக்கை TVS MSP பிரிண்டர் மற்றும் பிரிண்டர் டோனர்கள் போன்றவைகள் வாங்க உத்தேச செலவினத் தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு :**<br>பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br><br>**ந.க.எண். 5501 / 2019 / அ1** | அனுமதிக்கப்பட்டது |